# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC. No. 240/2022**

Prosecution witness: **1**

| | | | |
|---|---|---|---|
| Name: | சுரேஷ்குமார் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused produced

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **12.07.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது துாத்துக்குடி மாவட்டம் சாத்தான் குளம் காவல்நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் கன்னியாகுமரி மாவட்டம் கோர்ட்டார் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருநதபோது 23.11.2021 ம் தேதி காலை 9.15 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது என்னுடைய ரகசிய தகவலாளி என்னிடம் வந்து கோர்ட்டார் இந்து கல்லுாரி அனாதை மடம் கேட்டின் அருகில் கீழமறவன் குடியிருப்பு, நேதாஜி நகரை சேர்ந்த பாஸ்கர் மகன் பபின் என்பவர் கஞ்சா என்ற போதைப்பொருளை கல்லுாரி மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் விற்பனை செய்வதற்காக அந்த ஏரியாவில் நின்றுகொண்டிருப்பதாக என்னை அழைத்துச்சென்றார். மேற்படி நபரை அடையாளம் காட்டுகிறேன் என்று கூறிய தகவலை தகவல் அறிக்கையாக

தயார் செய்தேன். பின்னர் தகவலை தொலைபேசி மூலம் ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்தேன். பின்னர் அந்த தகவலை ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். அதை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்தேன். பின்னர் என் தலைமையில் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் -திரு.ரகு மற்றும் திரு.ராஜன் , தலைமைக்காவலர்-எட்வின்ஜோஸ், முதல்நிலைக்காவலர்-உமர்செரிப் ஆகியோர்களை கண்காணிப்புப்படை நியமித்துக்கொண்டு தேவையான உபகரணங்களை எடுத்துககொண்டு நாங்கள் தனித்தனியே எங்கள் இருசக்கரவாகனத்தில் 9.20 மணிக்கு தகவலாளியுடன் நிலையத்தில் இருநது புறப்பட்டு 9.30 மணிக்கு சம்பவ இடம் சென்று மறைந்திருநது காத்திருந்தபோது கருப்பு நிற கால்சட்டை மற்றும் வெள்ளை நிற பூப்போட்ட சட்டை அணிந்திருநத நபர் அங்கு 9.45 மணிக்கு வந்தார். அவரை ரகசியதகவலாளி அடையாளம் காட்டி மறைந்துகொண்டார். நாங்கள் அடையாளம் காட்டிய நபரை நெருங்கி சென்றபோது அவர் தப்பிக்கு முயற்சித்தார். அவரை பிடித்து விசாரித்தபோது அவர் பெயர்விலாசம் கூறினார். அவரிடம் எங்களை சுயஅறிமுகம் செய்துகொண்டு எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்து உங்களிடம் கஞ்சா என்ற போதைப்பொருள் இருப்பதாக சந்தேகப்படுகிறோம். உங்களை சோதனை செய்யவேண்டும் என்று கூறினேன். அவருக்கு சோதனையிட அருகில் உள்ள நீதித்துறை நடுவர் முன்னிலையிலோ, அரசு பதிவிதழ்பெற்ற அலுவலர் முன்னிலையிலோ அழைத்துசென்று சோதனை செய்ய கேட்கும் உரிமை உள்ளது என அவரது உரிமை விளக்கிக்கூறப்பட்டது. அதற்கு அவர் வேறு எங்கும் வர விருப்பமில்லை. காவல் துறையினராகிய தாங்களே சோதனை செய்ய சம்மதிக்கிறேன் என்று கூறினார். எனவே, அவருக்கு அறிவிக்கபட்ட விபரத்தையும், அவர் பதில் தெரிவித்த விபரத்தையும ஒரு சோதனை சம்மத

கடிதமாக எழுதி பெற்றோம். பின்னர் அவர் தானாக முன் வந்து அவர் கையில் இருந்த சாக்குப்பையை கொடுத்தபோது, அதை திறந்துபார்த்தோம். அதில் பழுப்பு நிறமுடைய கஞ்சா போன்ற பொருள் இருந்தது. அதில் சிறிது எடுத்து தீயிலிட்டு வாட்டியபோது கஞ்சா வாடை அடித்தது. அவர் வழக்கமாக கஞ்சா வியாபாரம் செய்வதாகவும், கேரளாவில் இருந்து அடையாளம் தெரியாத நபரிடம் வாங்கி வந்து விற்பனை செய்வதாக கூறினார். அதை நாங்கள் கொண்டுசென்ற மின்னணுதராசில் எடைபோட்டு பார்த்தபோது அது சுமார் 21 கிலோ கஞ்சா இருந்தது. பின்னர் அதில் இருந்து நிலையான மாதிரிக்காவவும், பரிசோதனைக்காகவும் தலா 100 கிராம் எடுத்து அதை பாலிதீன் கவரில் போட்டு பின்னர் அதை காக்கி தாளில் வைத்து நூலால் கட்டி அதில் SHO சீல் வைத்து S1 , S2 என குறியீடு செய்தோம். பின்னர் மீதம் இருநத கஞ்சாவை அதே வெள்ளைநிற சாக்குப்பையில் கட்டி SHO சீல் வைத்து P1 என குறியீடு செய்தோம். அவற்றில் விபரங்கள் அடங்கிய துண்டுத்தாளை S1 , S2 வில் ஒட்டினோம். சாக்குப்பையின் மீது P1 என குறியிட்டோம். சம்பவ இடத்தில் தனி நபர்களை அழைத்தும் அவர்கள் சாட்சியாக இருக்க முன்வராததால் காவல் துறையினராகிய தலைமைக்காவலர் மற்றும் முதல் நிலைய காவலரை சாட்சியாக நியமித்து பொருட்களை அத்தாட்சியில் 10.45 மணிக்கு கைப்பற்றினேன். பின்னர் அவர் சட்டவிரோதமாக கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக கைது செய்வதற்கான காரணங்களை விளக்கிக்கூறி அவரை எனது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டேன். பின்னர் 12.00 மணிக்கு சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் எதிரியை நிலையம் கொண்டுவந்து காவல் நிலைய குற்ற எண் 873/2021 , ச/பி 8(C) r/w 20(b)(ii)(C) NDPS Act – ன் வழக்கு ப திவு செய்தேன். பின்னர் அவ்வாறு பதிவு

செய்யப்படட முதல் தகவல் அறிக்கை எண்ணை சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட S1, S2 மற்றும் P1 சான்றுப்பொருட்களின் மீது எழுதினேன். பின்னர் அசல் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் விசாரணை நகலையும், பிரிவு -57 ன் படியான விரிவான அறிக்கையுடன் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். ரகசிய தகவல் அ.சா.ஆ. 1 ஆகும். சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ. 2 ஆகும். அத்தாட்சி அ.சா.ஆ-3 ஆகும். கைது அறிவிப்பு அ.சா.ஆ. 4 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆகும். பிரிவு -57 ன் படியான விரிவான அறிக்கை அ.சா.ஆ. 6 ஆகும். S1, S2 என குறியிடப்பட்ட பகுப்பாய்வுக்கு சென்று திரும்பிய கஞ்சா பொட்டலங்கள் சா.பொ.1 மற்றும் சா.பொ2 ஆகும். P1 என குறியிடப்பட்ட வெள்ளை நிற சாக்குப்பையில் உள்ள மீதம் உள்ள கஞ்சா சா.பொ.3 ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**